பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 191

வெள்ளிக்கிழமை
06 ஜூன் 2025

வைகாசி 23 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

மாகாணசபைத் தேர்தல்

## சட்டவரைவு முன்வைப்பு!

கொழும்பு, ஜூன் 6
மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு ஏதுவான சட்டவரைவு நாடாளுமன்றத்தில் நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ☞ 11

## செம்மணியின் பல பகுதிகளிலும் புதைகுழிகள் நிறைந்திருக்கலாம்!

காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் அச்சம்

யாழ்ப்பாணம், ஜூன் 6
செம்மணி சித்துப்பாத்தி மயானத்தில் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள மனிதப் புதைகுழி போன்று, ஏராளமான புதைகுழிகள் செம்மணியில் இருக்க வாய்ப்புள்ளது - என்று காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவித்துள்ளனர்.
செம்மணியில் நேற்று இடம்பெற்ற போராட்டத்தின் பின்னர் இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-
யுத்தம் நடந்த கடந்தகாலங்களில் செம்மணி முழுவதும் பலர் ☞ 11



தையிட்டி திஸ்ஸ விகாரையில்

## ஆயிரக்கணக்கில் சிங்கள மக்களை களமிறக்குவதற்குத் தீவிர முயற்சி!

யாழ்ப்பாணம், ஜூன் 6
யாழ்ப்பாணம் தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரையில் வழிபாட்டு நடவடிக்கைகளுக்காக ஆயிரக்கணக்கான சிங்கள மக்களைக் கொண்டுவருவதற்கு தெற்கில் முயற்சிகள் இடம்பெற்றுவருவதாக நம்பகரமாக அறியமுடிகின்றது. ☞ 11

சித்துப்பாத்தி மனிதப்புதைகுழி

## அகழ்வு நடவடிக்கைகளின்போது சர்வதேச கண்காணிப்பு அவசியம்

வலியுறுத்தி செம்மணியில் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 6
அரியாலை செம்மணி சித்துப்பாத்தி இந்துமயானத்தில் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் மனிதப் புதைகுழி அகழ்வு நடவடிக்கை சர்வதேசத்தின் கண்காணிப்புடனும், சர்வதேச நியமங்களைப் ☞ 11



## செம்மணிப் புதைகுழியில் நேற்றும் 5 என்புச் சிதிலங்கள் அடையாளம்

இணைந்த நிலையில் ஆண், பெண் சிதிலங்கள்
இதுவரை 17 சிதிலங்கள் அவதானிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 6
யாழ்ப்பாணம் செம்மணி சித்துப்பாத்தி மயானத்தில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்றுவரும் மனிதப் புதைகுழியில் நேற்று ஐந்து சிதிலங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.
இதையடுத்து இதுவரை அவதானிக்கப்பட்ட சிதிலங்களின் எண்ணிக்கை ☞ 11

## தமிழரசு ஆட்சியமைப்பதற்கு தேசிய மக்கள் சக்தி ஆதரவா?

தகவல்களில் உண்மையில்லை என மறுப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 6
யாழ்ப்பாண மாவட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆட்சியமைக்க, தேசிய மக்கள் சக்தி ஆதரவளிக்க ☞ 11

## சித்துப்பாத்தி அகழ்வுப் பகுதியை புதைகுழியாக அறிவிக்கும் மனு

யாழ். நீதவான் நீதிமன்றில் இன்று கட்டளை

யாழ்ப்பாணம், ஜூன் 6
யாழ்ப்பாணம் செம்மணி சித்துப்பாத்தி மயானத்தில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்றுவரும் பகுதியை, மனிதப் புதைகுழியாக அறிவிக்குமாறு கோரி ☞ 11

## புலிகளிடமிருந்து மீட்கப்பட்ட நகைகள் மக்களுக்கே வழங்கப்படவேண்டும்

செல்வம் எம்.பி. வலியுறுத்து ☞ 11

### முச்சந்தி முரளி

**‘ஆசை மட்டுமில்லை அரசியலும் வெட்கமறியாது கண்டியளோ’**

## புலிகளிடமிருந்து மீட்கப்பட்ட நகைகள் வடக்கின் அபிவிருத்திப் பணிகளுக்கு


அமைச்சர் பிமல் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 6
விடுதலைப்புலிகளின் வைப்பகத்திலிருந்து மீட்கப்பட்ட தங்கத்தை மக்களிடம் கையளிக்கவே எதிர்பார்க்கின்றோம். எனினும், அத்தாட்சிப் பத்திரங்கள் இல்லாத நகைகள் வடக்கு அபிவிருத்தி நிதியமொன்று உருவாக்கப்பட்டு வடக்கு அபிவிருத்திக்காகவே ☞ 11

## வீட்டுக்கு ஆதரவுகோரி வீணையிடம் சீ.வீ.கே.!

சிறீதர் தியேட்டரின் படியேறினார்



☞ 11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கொவிசெத**

| | |
|---|---|
| திகதி | 05.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4093 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கங்கள் | 17 18 25 62 |
| விசேட எழுத்து | K |

**ஹந்தஹன ராசி சுப பலன்**

| | |
|---|---|
| திகதி | 05.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1160 |
| வெற்றி இலக்கினம் | ரிஷபம் |
| வெற்றி இலக்கங்கள் | 05 35 41 58 |

**NLB ஜய**

| | |
|---|---|
| திகதி | 05.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0119 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கங்கள் | 7 5 4 1 |

**மெகா பவர்**

| | |
|---|---|
| திகதி | 05.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2199 |
| ஆங்கில எழுத்து | I |
| சுப்பர் இலக்கம் | 20 |
| வெற்றி இலக்கங்கள் | 07 11 19 70 |

**மஹஜன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 05.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5851 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கங்கள் | 9 0 8 7 1 0 |

**தன நிதானய**

| | |
|---|---|
| திகதி | 05.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1881 |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கங்கள் | 20 38 45 59 |
| விசேட எழுத்து | H |

**அத சம்பத**

| | |
|---|---|
| திகதி | 05.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0426 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கங்கள் | 8 7 1 0 |

# தற்போது நடக்கும் பேச்சுகள் கதிரைக்கான பேரம்பேசல்கள்

*எம்.ஏ.சுமந்திரன் தெரிவிப்பு*

**கொழும்பு, ஜூன் 6**

**தற்போது நடக்கும் பேச்சுவார்த்தைகள் அனைத்தும் சபைகளில் யார் ஆட்சியமைப்பது என்ற கதிரைக்கான பேரம்பேசுதல்கள் பற்றியதே. தமிழ் மக்களின் நலன்களை முன்நிறுத்தி பேச்சு முன்னெடுப்பதாக இருந்தால் தேர்தலுக்கு முன்பே அதைச் செய்திருக்கலாம். தேர்தலில் இணைந்தும் போட்டியிட்டிருக்கலாம்.**

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். வவுனியாவில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜனநாயகத் தமிழ்த்தேசிய கூட்டணி, தமிழ்த்தேசியப் பேரவை ஆகிய இரண்டு தரப்பினரோடும் கடந்த நாள்களிலே பேச்சுகளை நடத்தியிருந்தோம். எந்தக் கட்சிக்கு அதிகூடிய ஆசனங்கள் இருக்கிறதோ அந்தக்கட்சி ஆட்சியமைப்பதற்கு ஏனைய கட்சிகள் உதவிபுரியவேண்டும் என்பது எமது கோட்பாடு. இருதரப்பினரும் அந்தக் கோட்பாட்டை முழுமையாக ஏற்றிருந்தார்கள். இந்தநிலையில் ஓர் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது என்று அறிகிறோம். ஜனநாயகத்தமிழ்த் தேசியக் கூட்டணியின் செயலாளர் வவுனியாவில் வைத்து சில விடயங்களைச் சொல்லியிருக்கிறார். சபைகளில் நிர்வாகத்தை அமைக்கவேண்டும் என்ற ஆர்வத்தோடு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது என்று வெளிப்படையாகச் சொல்லியிருக்கிறார். அதற்கு நன்றிகள்.

உண்மை இல்லாமல் கதிரைதான் முக்கியம் என எவரோடும் கூட்டுவைக்கலாம் என்று செயற்படுவார்கள் என்றால் இணைந்து செயற்படுவது தொடர்பாக நாங்களும் சிந்திக்கவேண்டியிருக்கும் - என்றார். (எ-110)

**சுபிரி தன சம்பத**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 05.06.2025 | வியாழக்கிழமை | K | 4 6 8 1 3 2 | 0559 |

**Super Ball**

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 05.06.2025 | வியாழக்கிழமை | 2825 | F | 25 41 45 71 |

**சனிதா**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 05.06.2025 | வியாழக்கிழமை | M | 30 36 39 73 | 4986 |

**SASIRI**

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 05.06.2025 | வியாழக்கிழமை | 0697 | 27 29 46 |

**லக்ன ராசி**

| திகதி | தினம் | | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 05.06.2025 | வியாழக்கிழமை | தனுசு | 18 19 29 51 | 4537 |

**KAPRUKA**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 05.06.2025 | வியாழக்கிழமை | N | 13 | 14 25 38 62 | 2001 |

**அத கோடிபதி**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 05.06.2025 | வியாழக்கிழமை | D | 01 21 30 66 | 2651 |

## கைத்தொழில் வலயமாக மேல்மாகாணம்

**கொழும்பு, ஜூன் 6**

மேல்மாகாணம் கைத்தொழில் வலயமாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

மேல்மாகாணத்தில் இரு திட்டங்களுக்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

களுத்துறை மாவட்டத்தில் 350 ஏக்கர் அரச காணியில் 2.5 பில்லியன் முதலீட்டில் கைத்தொழில் வலயமொன்று உருவாக்கப்படவுள்ளது. இங்கு வாகன உதிரிப்பாகங்கள்,இறப்பர் சார்ந்த உற்பத்திகள், மருந்துவகைகள் என்பன உற்பத்திசெய்யப்படவுள்ளன. மற்றைய திட்டம் வெதல்வத்த ராஜகமப் பிரதேசத்தில் 24 ஏக்கர் காணியில் 500 மில்லியன் முதலீட்டில் முன்னெடுக்கப்படவுள்ளது. (ச-25, 6)

## ஈ.பி.டி.பியுடன் பேசவில்லை!

*ஜ.த.தே.கூட்டணி தெரிவிப்பு*

**கொழும்பு, ஜூன் 6**

ஜனநாயகத் தமிழ்க் தேசியக் கூட்டணிக்கும், ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையே சந்திப்புகள் இடம்பெறவில்லை என்று அந்தக் கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிக்கும் இடையே சந்திப்பு நடைபெறுகின்றது என்று தகவல் வெளியாகியிருந்தது. அவ்வாறான சந்திப்புகள் எவையும் இடம்பெறவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-125)

## போதைப்பொருள் பாவனை
# சாரதிகளைக் கண்டறிய பொறிமுறை அவசியம்

**கொழும்பு, ஜூன் 6**

ஐஸ் உள்ளிட்ட போதைப்பொருள்கள் மற்றும் போதை மாத்திரை என்பவற்றைப் பாவிக்கும் சாரதிகளைக் கண்டறிவதற்கும் பொறிமுறையொன்று அவசியம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் (திருத்தச்) சட்டவரைவுமீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது நாட்டிலுள்ள போக்குவரத்துச் சட்டத்தின்பிரகாரம் போதைப்பொருள் அருந்திவிட்டு வாகனம் செலுத்தும் சாரதியைக் கைதுசெய்வதற்குரிய ஏற்பாடு உள்ளது. பலூன் போன்றதொன்றை ஊதவைத்துப் பரிசோதனைமூலம் போதைப்பொருள் பாவனையை உறுதிப்படுத்தமுடியும். ஆனால் சில பஸ் சாரதிகள் போதை மாத்திரை பயன்படுத்துகின்றனர். இப்படியானவர்களை எவ்வாறு பரிசோதனைக்குட்படுத்துவது என்பது பற்றியும் ஆராயவேண்டும் - என்றார். (ச-44)

# பொய்யுரைப்பது யார் என்பதை காலம் நிச்சயம் வெளிப்படுத்தும்

*நாமல் ராஜபக்ச தெரிவிப்பு*

**கொழும்பு, ஜூன் 6**

பொய்யுரைத்து ஆட்சிக்கு வந்தது யாரென்ற கேள்விக்குரிய பதிலை காலம் நிச்சயம் வழங்கும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் நாமல் ராஜபக்சவுக்கும், நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. நீதி அமைச்சரின் உரையொன்று தொடர்பில் நாமல் ராஜபக்ச விமர்சனங்களை முன்வைக்க முற்பட்டவேளையே வாக்குவாதம் ஏற்பட்டது. "எடிட் செய்யப்பட்ட காணொலியை வைத்துக்கொண்டு கதைக்கவேண்டாம், தேவையென்றால் முழுமையான வீடியோவை அனுப்புகின்றேன். பொய்யுரைத்து சேறு பூசவேண்டாம்" என்று நீதி அமைச்சர் குறிப்பிட்டார்.

"நீதி அமைச்சர் பொறுப்புடன் உரையாற்றவேண்டும். அவர் சட்டமா அதிபர் திணைக்களத்தில்தான் தொழில் செய்தார். எனவே, நீதித்துறை தொடர்பில் அவர் தவறான கருத்தை வெளியிட்டால் அதனை சுட்டிக்காட்டும் பொறுப்பு எமக்கு உள்ளது." என்று நாமல் பதிலளித்தார்.

பொய்யுரைக்கவேண்டாம் என நீதி அமைச்சர் மீண்டும், மீண்டும் வலியுறுத்தினார். "பொய்யுரைப்பது நாமா , நீங்களா என்பதை காலம் நிரூபிக்கும்" என்று நாமல் குறிப்பிட்டார். (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழரசுக் கட்சியும் கூட்டுக்குள் வரத்தடையில்லை!

## சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 6**

**ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கும், தமிழ்த் தேசியப் பேரவையினதும் கூட்டு என்பது சுமந்திரனுக்கு எதிரானது அல்ல. இலங்கைத் தமிழரசுக் கட்சியும் எமது கூட்டணி யில் இணையவேண்டும். அவர்கள் ஆட்சி யமைக்கத் தேவையான இடங்களில் அவர்களுக்கான ஆதரவை வழங்குவோம் என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, இந்தக் கூட்டு இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கான சமஷ்டி முறையை உருவாக்குவதற்கான கூட்டு ஆகும். இதில் இலங்கைத் தமிழரசுக் கட்சியைத் தவிர்ந்த தமிழ்த் தேசியத்தை நேசிக்கும் அனைத்துக் கட்சிகளும் இணைந்துள்ளன.

இலங்கைத் தமிழரசுக் கட்சியும் இதில் இணைய வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். எங்களின் கோரிக்கைகளை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானத்திடம் கையளித்தோம். அது நிராகரிக்கப்பட்டது. அது தொடர்பாக தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரனுக்கும் தெரியப்படுத்தியிருந்தோம். அவர்கள் தரப்பில் இருந்து எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. அனைவருடனும் இணைந்து செல்லவேண்டும் என்ற அடிப்படையிலேயே கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துடன் பேசினோம், சுமந்திரனுடனும் பேசினோம். அனைவருடனும்பேசிக்கொண்டிருக்கின்றோம். இருதரப்புக்கள் ஒரு முடிவுக்கு வந்திருக்கின்றன. மூன்றாவது தரப்பு எந்த முடிவும் சொல்லாது அமைதியாக இருக்கின்றது என்றார். (எ-125)

# வீடமைப்புத் திட்டத்துக்கான நிதியை அதிகரிக்க அனுமதி

யாழ்ப்பாணம், ஜூன் 6

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் போரால் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகளை நிர்மாணிக்கும் திட்டத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 30 ஆண்டுகளாக நிலவிய மோதல் சூழ்நிலை காரணமாக அந்தப் பிரதேசங்களில் பெருமளவான வீடுகள் சேதமடைந்தன. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 2009 ஆண்டிலிருந்து இதுவரை 2 இலட்சத்து 74 ஆயிரத்து 728 குடும்பங்களைச் சேர்ந்த 9 இலட்சத்து 14 ஆயிரத்து 722 நபர்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 8 மாவட்டங்களில் ஒரு இலட்சத்து 50 ஆயிரத்து 488 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள 8 மாவட்டங்களில் மேலும் 16 ஆயிரத்து 759 வீடுகள் நிர்மாணிக்கப்பட வேண்டும் என இனங்காணப்பட்டுள்ளது.

2025 ஆண்டிலிருந்து நடைமுறையாகும் வகையில் நிரந்தர வீடமைப்புத் திட்டப் பயனாளி நிர்மாணிக்கும் அடிப்படையில் அரசாங்கத்தால் வழங்கப்படும் உதவிப் பணத்தை பின்வரும் வகையில் அதிகரிப்பதற்கு நகர அபிவிருத்தி, நிர்மாண மற்றும் வீடமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

550 சதுர அடி வீடுகளை அமைப்பதற்காக அரச நிதியில் வழங்கப்படும் உதவிப் பணத்தை ரூபா 15 இலட்சம் வரை அதிகரித்தல், 340 சதுர அடி வீட்டினை அமைப்பதற்காக அரச நிதியில் வழங்கப்படும் உதவிப் பணத்தை ரூபா 9 இலட்சம் வரை அதிகரித்தல் ஆகிய யோசனைகளுக்கே அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. (எ-இ)



# கல் அகழ்வு நால்வர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 6

சாவகச்சேரி சரசாலை காட்டுப்பகுதியில் சட்டவிரோதமான கல் அகழ்வில் ஈடுபட்ட நால்வர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மாத்தளன் காட்டுப்பகுதியில் கல்அகழ்வு இடம்பெறுவதாக கிடைத்த தகவலையடுத்து கிராம அலுவலர் கனிமவள திணைக்களத்துக்கு அறிவித்த நிலையில் அங்கு சென்ற அதிகாரிகள் அப்பகுதியைச் சுற்றிவளைத்து கல் அகழ்வில் ஈடுபட்ட மூவரையும் அவர்களுக்கு உடந்தையாக இருந்த காணி உரிமையாளரும் கைது சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். சந்தேகநபர்களை சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-25, 9)

# கட்சிகளுக்கு வரும் நிதியை ஆராயும் வகையில் சட்டம்!

## வலியுறுத்துகின்றார் கோடீஸ்வரன் எம்.பி.

கொழும்பு, ஜூன் 6

அரசியல் கட்சிகளுக்கு நிதி வரும் வழிமுறைகள் தொடர்பில் ஆராய்வதற்கு வழிவகுக்கும் சட்டமும் நிறைவேற்றப்பட வேண்டும் என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, அரசியல் கட்சிகளுக்குரிய நிதி எங்கிருந்து வந்திருக்கின்றது, அந்த நிதி எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது, எந்த நாட்டில் இருந்து வந்திருக்கின்றது, எந்த அமைப்புகளிடமிருந்து வந்திருக்கின்றது என்பதை விசாரிப்பதற்குரிய எந்தவொரு அமைப்பும் கட்டமைப்பும் இல்லாத நிலையே உள்ளது. எனவே, கட்சிகளுக்கு வரும் நிதியை ஆராய்வதற்காக ஒரு சட்ட வரைவு உயரிய சபையில் கொண்டு வரப்பட வேண்டும். அரசியல் கட்சிகளுக்கு வரும் நிதி தொடர்பில் வெளிப்படைதன்மை இல்லாததால் அந்த நிதியை வைத்து நாட்டைக் குழப்புவதற்குரிய செயற்பாடுகளில் ஈடுபடுவதையும் காணக்கூடியதாக உள்ளதுஎன்றார். (எ-44)



# அவுஸ்திரேலிய துணைப்பிரதமர் கடற்படைத் தளபதியுடன் சந்திப்பு

கொழும்பு, ஜூன் 6

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய துணைப்பிரதமர் ரிச்சர்ட் மால்ஸ் உள்ளிட்ட குழுவினர், கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் கான்சன பானகொடவை கடந்த புதன்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போது அவுஸ்திரேலிய துணைப் பிரதமர் உள்ளிட்ட அவுஸ்திரேலிய பிரதிநிதிகள், கடல்சார் களங்கள் மற்றும் தேசிய ஹைட்ரோகிராஃபிக் அலுவலகத்தின் செயற்பாடுகள் குறித்து ஒரு விளக்கக்காட்சியை வழங்கினர், மேலும் அது தொடர்பான இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் குறித்து கருத்துகளை பரிமாறிக்கொண்டனர். (ச-25,129)

# நாட்டின் வங்குரோத்துக்கு கோத்தா காரணம் இல்லை

## இந்திக அனுருத்த வக்காலத்து

கொழும்பு, ஜூன் 6

நாம் திருடவும் இல்லை. உகாண்டாவில் பணத்தைப் பதுக்கவுமில்லை. நாடு வங்குரோத்து அடைய கோத்தாபயவின் ஆட்சி காரணமல்ல என்று மொட்டுக் கட்சியின் முன்னாள் இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

கோத்தாபயவின் ஆட்சியில் உற்பத்தியை கூட்டுவதற்கும் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கும் கொரோனாவை எதிர்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதனால் நாடு வீழ்ச்சியடைந்தது கடன் பெரும் எல்லையும் கடந்திருந்தது. வெளிநாட்டு கடன்களை பெரும் நிலை இருக்கவில்லை. கோத்தாவும் கடன் வாங்குவதற்குத் தயாராக இருக்கவில்லை. அதனால் எல்லா பிரச்சினை களுக்கும் நாங்கள் முகம் கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டோம். எமது அரசியல்வாதிகள் திருடினார்கள் என்று செய்யப்படுகின்ற முறைப்பாடுகளில் உண்மை இல்லை. தற்போது சில தீர்மானங்கள் எடுக்கும்போது அரச அதிகாரிகள் கூட இரண்டு மூன்று தடவைகள் யோசிக்க வேண்டியுள்ளது. பின்னர் அவர்கள் பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டி வரலாம் என்ற பயம்தான் அதற்குக் காரணம் என்றார். (எ-75)

# வீதிப் பாதுகாப்புக்கு ஏ.ஐ. சாதனங்கள்

கொழும்பு, ஜூன் 6

வீதிப் பாதுகாப்பை உறுதிசெய்வதற்காக இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த நீண்ட தூர பேருந்துகளில் செயற்கை நுண்ணறிவு மூலம் கட்டுப்படுத்தப்படும் சாதனங்கள் நிறுவப்படும் என்று போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அடுத்த இரண்டு மாதங்களுக்குள் 40 பேருந்துகளில் ஏ.ஐ. கட்டுப்பாட்டு சாதனங்கள் நிறுவப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். சகோதரர்கள் உங்களிடம் ஆலோசனை கேட்டு வருவார்கள். சிலருக்கு அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். மாலையில் உற்சாகமாகக் காணப்படுவீர்கள். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்.

**இடபம்:** புதிய முயற்சிகள் எதுவும் வேண்டாம். ஒரு சிலருக்கு வெளியூர் களில் இருக்கும் கோயில்களை தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும். மாலையில் குடும்பத்துடன் உறவினர், நண்பர்கள் வீட்டுக்குச் சென்றுவருவீர்கள். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்கு ஒத்துழைப்புத் தருவார்.

**மிதுனம்:** மனதுக்கு மகிழ்ச்சிதரும் சம்பவம் நடைபெறும். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும், சுபச்செலவாக இருக்கும் என்பது ஆறுதல்தரும். சிலருக்கு தாய்மாமன்வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். தாயின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள்.

**கடகம்:** தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகமாக இருப்பீர்கள். சிலருக்கு தாய்வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். வாழ்க்கைத்துணை வழியில் மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு நவீன டிசைனில் ஆடை வாங்கும் வாய்ப்பு ஏற்படும். உங்கள் தேவையறிந்து நண்பர் செய்யும் உதவி மகிழ்ச்சிதரும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** குடும்பம் அல்லது வேலை தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதை இன்றைக்குத் தவிர்ப்பது நல்லது. மற்றவர்களிடம் பேசும்போது நிதானம் அவசியம். வெளியில்செல்லும்போது கைப்பொருள்களை பத்திரமாக வைத்துக்கொள்ளவும். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை.

**துலாம்:** இன்றைக்கு எதிலும் நிதானமாகச் செயற்படவும். பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண் விவாதம் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றி பெறும் நாள். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகம் உண்டாகும். கணவன் மனைவிக் கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும்.

**தனுசு:** தந்தையின் தேவையைப் பூர்த்திசெய்து மகிழ்வீர்கள். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் சென்றுவரும் வாய்ப்பு ஏற்படும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் மறையும். மாலையில் பள்ளி, கல்லூரிக்கால நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள்.

**மகரம்:** பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்ற முயற்சி செய்யவும். உறவினர்கள் வருகையால் திடீர்ச்செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்து விடுவீர்கள். சிலருக்குக் குடும்பத்துடன் கோயிலுக்குச் செல்லும் வாய்ப்பு ஏற்படும்.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்குவரும். தாயிடம் கேட்ட உதவி கிடைக்கும். உடல்நலனில் கவனம் தேவை. சிலருக்கு திடீர்ப்பயணங்களும் அதனால் விரயங்களும் உண்டாகும். அலுவலகத்தில் சக ஊழியர்களின் விஷயத்தில் தலையிடவேண்டாம்.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். புதிய முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தினர் உங்கள் யோசனைக்கு முக்கியத்துவம் தருவார்கள். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

### துன்னாலையில்
# 15 லீற்றர் கசிப்பு மீட்பு சந்தேகநபர் தப்பிப்பு!

யாழ்ப்பாணம், ஜீன் 6

வடமராட்சி துன்னாலைப் பகுதியில் 15 லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை துன்னாலைப் பகுதியில் காங்கேசன்துறைப் பிராந்தியக் குற்றத்தடுப்புப் பிரிவினர் திடீர் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர். இதன்போது மோட்டார் சைக்கிளொன்றில் கசிப்பினை எடுத்துச்சென்ற ஒருவரை மறிக்க முற்பட்டபோது கசிப்புக் கலனை வீசிவிட்டு அவர் தப்பிச்சென்றுள்ளார். மீட்கப்பட்ட கசிப்பு காங்கேசன்துறைப் பிராந்தியக் குற்றத்தடுப்புப் பிரிவினரால் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளது. (ச-41-100)



## சத்தியப்பிரமாணம்

யாழ்ப்பாணத்தின் பிரபல தொழிலதிபர் ஞானப்பிரகாசம் சுலக்சனின் வழிகாட்டலில் வேலணைப் பிரதேசசபையில் போட்டியிட்டு வெற்றியீட்டிய சிவநேசன் நேற்றுமுன்தினம் புதன்கிழமை சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். (ச-25,20)

# பேச்சுத்திறன் காண்நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜுன் 6

ஆறுகால்மடம் அறிவொளி சனசமூக நிலையத்தின்கீழ் இயங்கும் அறிவொளி முன்பள்ளிச் சிறார்களின் பேச்சுத்திறன் காண்நிகழ்வு அறிவொளி கலையரங்கில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. அறிவொளி சனசமூக நிலையத்தின் தலைவர் சி.க.தம்பிராசா தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக வண்ஸ்ரீ வைத்தியலிங்கம் வித்தியாலயத்தின் அதிபர் இ.ராஜ்கரன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.கோட்ட முன்பள்ளி இணைப்பாளர் பி.தர்சினி, யாழ்மாநகரசபை 10 ஆம் வட்டார உறுப்பினர் சே.மதுசிகன், கௌரவ விருந்தினர்களாக புதிய சோனகதெரு கிராம அலுவலர் திருமதி தீபன் பிரதீபா, பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் க.சுதாகரன், சமுர்த்தி உத்தியோகத்தர் திருமதி எட்வின் ஜெயக்குமார் மேரிஸ்ரெலா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-25)

## சண்டிலிப்பாயில் தாச்சி சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், ஜுன் 6

யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் 31ஆவது ஆண்டு நினைவை முன்னிட்டு 28ஆவது மாபெரும் தாச்சிச் சுற்றுப்போட்டி, சண்டிலிப்பாய் உதயசூரியன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றையதினம் நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில் சுதுமலை நாவலர் விளையாட்டுக்கழகமும், சண்டிலிப்பாய் உதயசூரியன் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ச-25)

## 'குந்தவை கதைகள்' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜுன் 6

மீளுகை இலக்கிய அமைப்பின் ஏற்பாட்டில் மூத்த எழுத்தாளர் குந்தவையின் "குந்தவை கதைகள்" சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா யாழ்ப்பாணம், சேர். பொன் இராமநாதன் வீதி, சரஸ்வதி மண்டபத்தில் எதிர்வரும் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. உடுவில் அரவிந்தன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் வெளியீட்டுரையை அ.யேசுராசா வழங்கவுள்ளார். (ச-25)

# பொன்.நாகலிங்கத்தின் உருவச்சிலை திறப்பு

யாழ்ப்பாணம், ஜுன் 6

சுன்னாகம் பட்டினசபைத் தலைவராக இருந்து சுன்னாக நகரத்தை வடிவமைத்த செனட்டர் பொன்.நாகலிங்கத்தின் உருவச்சிலை வலிகாமம் தெற்குப் பிரதேசசபை முன்பாக நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்குத் திறந்துவைக்கப்படவுள்ளது.

ஓய்வுநிலை அதிபர் சு.தம்பித்துரை தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன், கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்டப் பதில் செயலர் ம.பிரதீபன், வலி தெற்குப் பிரதேசசபைச் செயலர் பா.ஜெயகரன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் த.சித்தார்த்தன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-25)

## யாழில் வடிகால்கள் சீரமைப்பு ஆய்வு!

யாழ்ப்பாணம், ஜுன் 6

யாழ்.மாவட்டச் செயலக வளாகம் மற்றும் சூழவுள்ள பிரதேசங்களின் வடிகாலமைப்பைச் சீர்செய்வது தொடர்பாக யாழ். மாவட்டப் பதில் செயலர் ம.பிரதீபன் கடந்த செவ்வாய்க்கிழமை துறைசார் அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

கலந்துரையாடலில் யாழ்.மாவட்டச் செயலகப் பிரதம கணக்காளர், பிரதம பொறியியலாளர், திட்டமிடல் பணிப்பாளர், உதவி மாவட்டச் செயலர், வீதி அபிவிருத்தித் திணைக்கள அதிகாரிகள் மற்றும் கட்டடங்கள் திணைக்கள அதிகாரிகள் கலந்துகொண்டனர். (ச-25,66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

முயற்சி என்பது ஒரு தடாகம். அதில் நீந்தி கரை சேரும்போது ஏற்படுவது போன்ற இன்பம் உலகத்தின் வேறு எந்த ஒன்றிலும் கிட்டுவதில்லை.

– ஷேக்ஸ்பியர் –


# புதைந்துவிடக்கூடாது புதைகுழிக்கான நீதி!

செம்மணி சித்துப்பாத்தி இந்துமயானத்தில் பெரும் மனிதப் புதைகுழி இருப்பதற்கான சாத்தியங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. சிசுக்களின் எலும்பு எச்சங்கள் உள்ளடங்கலாக மனித உடல் எச்சங்கள் பல அடையாளம் காணப்பட்டிருக்கின்றன. எலும்பு எச்சங்கள் அடையாளம் காணப்படும் இடங்களில் ஆடைகள் எதுவும் இதுவரை மீட்கப்படாதமை இந்த மரணங்களில் ஏதோ மர்மம் இருக்கின்றது என்ற சந்தேகத்தை அதிகப்படுத்தியிருக்கின்றது.

வடக்கு, கிழக்கில் இதுவரை பல இடங்களில் சந்தேகத்துக்கு இடமான வகையில் மனித எலும்பு எச்சங்கள் அடையாளம் காணப்பட்டு அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும், அவை இழுத்தடிக்கப்பட்டே வருகின்றன. அகழ்வின்போது எலும்பு எச்சங்கள் மீட்கப்பட்டபோதும், அதன் பின்னரான தொடர் நடவடிக்கைகள் எவ்வகையில் நடைபெறுகின்றன என்பது பகிரங்கப்படுத்தப்படுவதில்லை. காலப்போக்கில் அந்த அகழ்வு நடவடிக்கைகள் நிதிப்பற்றாக்குறையால் தடைப்பட்டு மெல்லமெல்ல மறக்கடிக்கப்படும் நிலைமையே நாட்டின் கடந்தகால அரசாங்கங்களால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

செம்மணி சித்துப்பாத்தி இந்துமயானத்தில் மனிதப் புதைகுழி இருக்கலாம் என்ற சந்தேகத்துக்கு வலுவான காரணங்கள் உள்ளன. யாழ்ப்பாணம் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட பின்னர் காணாமலாக்கப்பட்ட பலர் இராணுவத்தினரால் கொல்லப்பட்டு செம்மணியில் புதைக்கப்பட்டனர் என்று, கிருஷாந்தி கொலை வழக்கில் கைதான இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ச வாக்குமூலம் அளித்திருந்தார். 1995, 1996 ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாண குடாநாட்டில் இருந்து காணாமற்போன நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டு செம்மணியில் புதைக்கப்பட்டனர் என்று தனது வாக்குமூலத்தில் குறிப்பிட்டிருந்தார். 1999 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அகழ்வு நடவடிக்கையில் 15 மனித உடல் எலும்புகள் மீட்கப்பட்டன. அவற்றில் இரண்டு 1996 இல் காணாமற்போன ஆண்களுடையவை என அடையாளம் காணப்பட்டன.

இந்தப் பின்னணியில் தற்போது செம்மணியில் மனித எலும்பு எச்சங்கள் தொடர்ச்சியாக அடையாளப்படுத்தப்படும் நிலையில், கூடுதல் கரிசனை எடுக்கவேண்டியது அவசியமாகின்றது. அரசாங்கம் இந்த அகழ்வு நடவடிக்கைக்கான நிதியைத் தடையின்றி ஒதுக்கி, அங்கு புதைந்துள்ள உண்மைகளை வெளிக்கொணர்வது அவசியம். கடந்தகாலங்களில் நடந்த குற்றங்கள் தொடர்பாக எவ்விதமான சமரசமும் இன்றி நடவடிக்கை எடுக்கும் என்று கூறும் தற்போதைய அரசாங்கம், தமிழர் பகுதிகளில் நடத்தப்பட்ட படுகொலைகளுக்குக் காரணமானவர்களையும் சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். செம்மணிப் புதைகுழி விடயத்தில் இழுத்தடிப்புகளை மேற்கொள்ளாது துரிதமான ஆய்வுகளுக்கும், விசாரணைகளை விரைவுபடுத்தவும் ஆவண செய்யவேண்டும்.



## அனைத்து பல்கலைக்கழகங்களிலும் பகிடிவதைக்கு எதிரான செயலணி



பிரதமர் ஹரிணி தகவல்

**கொழும்பு, ஜூன் 6**

**பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் பதிவாகும் பகிடிவதைகளுக்கு எதிராக செயலணி ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம் என கல்வி அமைச்சரான பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

நாட்டில் அமைந்துள்ள 17 பல்கலைக்கழகங்களில் எந்த பல்கலைக்கழத்திலும் பகிடிவதைகள் தடைச் சட்டத்தின் கீழ் கடந்த 5 வருடங்களில் எவ்வித வழக்கும் தொடரப்படவில்லை. இப்போதுள்ள துரித தொலைபேசி இலக்கத்தை 24 மணிநேரமும் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

சகல பல்கலைக்கழகங்களிலும் இடம்பெறும் பகிடிவதைகளுக்கு எதிரான செயலணியை அமைத்து ஆண், பெண் சமூக சமத்துவ குழுவின் கீழான இணைக்குழுக்களின் ஊடாக வலையமைப்புகளை உருவாக்கி எந்தவொரு பகிடிவதை தொடர்பான தகவல்கள் கிடைத்தவுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கும் பொறிமுறைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவற்றைச் செயற்படுத்துவதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால்விசேடகுழுவொன்றும்அமைக்கப்பட்டுள்ளது-என்றார். (எ-இ)

## பயிர்ச்சேதம் 1918க்கு அழையுங்கள்

கொழும்பு, ஜூன் 6

விவசாயிகள் தங்கள் பயிர்ச் சேதம் குறித்து விவசாய மற்றும் விவசாயிகள் காப்பீட்டுச்சபையின் 1918 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து தகவல் தெரிவிக்கலாம்.

பயிர்ச் சேதத்தை மதிப்பிடும் பணியை விவசாய மற்றும் விவசாயிகள் காப்பீட்டு சபை ஆரம்பித்துள்ளது.

அதன்படி, நெல், சோளம், உருளைக்கிழங்கு, வெங்காயம், போஞ்சி மற்றும் பச்சை மிளகாய் ஆகிய பயிர்ச் செய்கை சேதங்களுக்கு காப்பீட்டுத் தொகை பெற வேண்டிய அவசியமில்லை என்பதுடன் 05 ஏக்கர் வரை இலவச காப்பீட்டு இழப்பீடு வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)




## ரயில்விபத்தில் தம்பதி பலி!

தெஹிவளை ரயில் பாதையைக் கடக்க முயன்ற தம்பதியினர், கொழும்பு கோட்டையிலிருந்து அலுத்கமை வரைசென்றுகொண்டிருந்த ரயிலில் மோதி உயிரிழந்துள்ளனர். இந்த விபத்து நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

பதுளை, பதுளபிட்டிய பகுதியைச் சேர்ந்த 58 வயதுடைய ஆண் மற்றும் 59 வயதுடைய பெண் ஆகியோரி உயிரிழந்துள்ளனர். தெஹிவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (சஇ)

## வாகன இறக்குமதி 136 பில். வருவாய்

கொழும்பு, ஜூன் 6

வாகன இறக்குமதியின் பின் இந்த வருடம் முதல் ஐந்து மாதங்களில் மாத்திரம் வாகன இறக்குமதி மூலம் 136 பில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக திறைசேரி அதிகாரிகள் அரசாங்க நிதி பற்றிய குழுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## பாதுகாப்புப் பல்கலைக்கழகமாகும் கொத்தலாவலப் பல்கலைக்கழகம்

கொழும்பு, ஜீன் 6

சேர் ஜோன் கொத்தலாவலைப் பாதுகாப்பு பல்கலைக்கழகம், சர்வதேச பாதுகாப்பு பல்கலைக்கழகமாக மாற்றப்படவுள்ளதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் உரையாயிற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். சேர் ஜோன் கொத்தலாவலைப் பாதுகாப்பு பல்கலைக்கழகத்தை சர்வதேச பாதுகாப்பு பல்கலைக்கழகமாக மாற்றுவதன்மூலம் முன்னாள் பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலையின் கனவு நனவாகும்.

முன்னைய அரசாங்கம் சேர் ஜோன் கொத்தலாவலைப் பாதுகாப்பு பல்கலைக்கழகத்தை தவறான முறையில் நிர்வகித்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-41-6)

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளை
சனிக்கிழமை- வைகாசி 24
07.06.2025
சுபநேரம் : 05.52- 07.22
ராகுகாலம் : 10.22 - 11.52

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதை மறுவாழ்வு நிலையங்களை வடக்கில் நிரந்தரமாக அமைக்குக!

## வடக்கு மாகாண ஆளுநர் பணிப்புரை

**யாழ்ப்பாணம், ஜூன் 6**

**உயிர்கொல்லி போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களுக்கு மறுவாழ்வளிக்கும்வகையில் புனர்வாழ்வு நிலையத்தை வடக்கில் நிரந்தரமாக அமைக்கும் வரையில் இந்தமாத இறுதிக்குள் கைவிடப்பட்ட அரச கட்டடத்தில் தற்காலிகமாக அதனை ஆரம்பிக்குமாறு வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா.வேதநாயகன் பணிப்புரை விடுத்துள்ளார். வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின்போது இவ்வாறு தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ். மாவட்டத்தில் உயிர்கொல்லி போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளநிலையில் அவர்களுக்கு மறுவாழ்வு வழங்குவது அவசியம் என தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையினர் கோரிவருகின்றனர்.

கிளிநொச்சி கிருஸ்ணபுரத்தில் இதற்கான கட்டடம் எம்மால் அடையாளப்படுத்தப்பட்டபோதும் அது பொருத்தமானது அல்ல தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது அதிகளவு சிறுவர்களும் உயிர்கொல்லி போதைப்பொருளுக்கு அடிமையாகிவருவதால் உடனடியாக மறுவாழ்வு நிலையம் அமைக்கப்படவேண்டும்- என்றார்.

இதன்போது அச்சுவேலியில் சிறுவர் சான்றுபெற்ற பாடசாலைக்கு அண்மையாகவுள்ள வடக்கு மாகாண சுதேச வைத்தியத்துறை திணைக்களத்துக்குச் சொந்தமான கட்டடத்தை புனரமைப்புச்செய்து பயன்படுத்த முடியும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. அதனை ஏற்றுக்கொண்ட வடக்கு மாகாண ஆளுநர் உடனடியாக அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், அது இயங்குநிலைக்கு வரும் வரையில் இந்த மாத இறுதிக்குள் உடனடியாக ஏதாவது ஓர் இடத்தை தற்காலிகமாக வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். இதன்போது வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், மூடப்பட்ட பாடசாலைகள் சில உள்ளன என்றும் அந்தக் கட்டடங்களை பார்வையிட்ட பின்னர் அவற்றில் செயற்படுத்த ஒத்துழைப்பு வழங்குவதாகவும் குறிப்பிட்டார்.

மேலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் மத்திய அரசாங்கத்தால் பாதுகாப்பு இல்லத்துக்காக அமைக்கப்பட்ட கட்டடத்தை மறுவாழ்வு நிலையத்துக்குப் பயன்படுத்துவதற்கு ஏதுவான நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பிக்குமாறு வடக்கு மாகாண பிரதம செயலாளருக்கும் ஆளுநர் அறிவுறுத்தினார். (ச-113)




# அலுவலகம் திறப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 6

நீர்வேலி தெற்கு முதியோர் சங்கத்துக்கென தனியான அலுவலகம் ஒன்று கடந்த வாரம் திறந்து வைக்கப்பட்டது. நீர்வைக் கந்தசுவாமிக்கோயில் வீதியிலுள்ள கட்டடம் ஒன்றில் இந்த அலுவலகம் செயற்படவுள்ளதாக முதியோர் சங்கத்தின் செயலாளர் எஸ்.கணேசமூர்த்தி தெரிவித்தார். இந்த முதியோர் சங்கம் கோப்பாய்ப் பிரதேச செயலகத்தின் உதவியுடன் கடந்த மாதம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச- 25, 17)

# வேப்பங்கன்றுகளை கையளிக்கலாம்!



யாழ்ப்பாணம், ஜூன் 6

3 அடி உயரமான வேப்பங்கன்றுகளை வைத்திருக்கும் சுற்றுச்சூழல்சார் தன்னார்வலர்கள் வழங்கி உதவுமாறு வலிகாமம் மேற்குப் பிரதேசசபை கோரிக்கை விடுத்துள்ளது

வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பொன்னாலைக் கிராமத்தில் சங்கானைப் பிரதேச செயலகத்தினால் வனவிரிவாக்கல் நடவடிக்கைகளுக்காக அண்மையில் அரச காணி பிரதேச சபைக்கு வழங்கப்பட்டது. குறித்த நிலப்பரப்பில் வனவிரிவாக்கல்திட்டத்தை முன்னெடுக் கும் முகமாக குறித்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வேப்பங்கன்றுகளை வழங்க விரும்பும் நலன்விரும்பிகள். 0212250144 பிரிதேசசபையின் இலக்கத்தைத் தொடர்பு கொள்ளுமாறு வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் செயலாளர் கோரிக்கை விடுத்துள்ளார். (ச-125)

சுற்றாடல் வாரத்தை முன்னிட்டு சங்கானை மேற்குப்பகுதியில் அமைந்துள்ள மண்டிகைக்குளத்தை அண்டி அடர்ந்து வளர்ந்திருந்த பார்த்தீனியச் செடிகள் வெட்டி அகற்றப்பட்டுள்ளன.

வலி மேற்கு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கமக்கார அமைப்புகள், கிராம மட்ட அலுவலர்கள், சமுர்த்தித் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் கமநல சேவை திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (ச-125)



# பசுமைக்காடு செயற்றிட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 6

யாழ்.மாவட்டச் செயலகத்தினால் தேசிய சுற்றாடல் வாரத்தினை முன்னிட்டு பழைய பூங்காவளாகத்தில் பசுமைக் காடாக்கல் செயற்றிடம் நேற்று வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டது. இந்தச் செயற்றிட்டத்தின்கீழ் 500 மரங்கள் நடப்படவுள்ள நிலையில் 200 மரங்கள் நடப்பட்டன.

முதலாவது மரக்கன்றினை யாழ்.மாவட்டச் செயலர் மருதலிங்கம பிரதீபன் நடுகை செய்ய தொடர்ச்சியாக திணைக்களத்தலைவர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் மரக்கன்றுகளை நடுகைசெய்தனர். (ச-41-125)

# வீட்டுவளாகத்தில் முதலை மீட்பு

வவுனியா, ஜூன் 6

வவுனியா கொக்குவெளிப் பகுதியில் வீட்டுவளாகத்திலிருந்து 9 அடி நீளமான முதலை ஒன்று நேற்று வனஜீவராசிகள் திணைக்களத்தால் மீட்கப்பட்டுள்ளது. குறித்த வீட்டுக்குப் பின்புறமுள்ள தோட்டப்பகுதியில் முதலை ஒன்று காணப்பட்ட நிலையில் வீட்டின் உரிமையாளர் அதனைத் துரத்துவதற்கு முற்பட்டபோது குறித்த காணியில் அமைந்துள்ள கைவிடப்பட்ட கிணற்றில் முதலை வீழ்ந்துள்ளது.



இதனையடுத்து அவரால் வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து குறித்த பகுதிக்குச் சென்ற வனஜீவராசிகள் திணைக்களத்தினர் கிணற்றிலிருந்து முதலையை மீட்டுச் சென்றனர். (ச-110)



# பொன். சிவகுமாரனுக்கு உணர்வுபூர்வ அஞ்சலி

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் முதன் முதலில் சயனைட் அருந்தி தன்னுயிரைத்தியாகம் செய்த முதல் வித்து பொன் சிவனுமாரன் 51 ஆவது நினைவுதினம் தமிழர் தாயகத்தில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. இராணுவத்தினரால் தகர்க்கப்பட்டு உரும்பிராய்ச் சந்தை வளாகத்தில் மீளப் பிரதிஷ்டைசெய்யப்பட்ட பொன். சிவகுமாரனின் சிலையடியில் வலிகாமம் கிழக்குப் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஸ் நேற்று வியாழக்கிழமை உணர்வுபூர்வமாக ஈகைச் சுடரேற்றி அஞ்சலிசெலுத்தினார். நிகழ்வில் போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் ஈஸ்வரன் மற்றும் அங்கத்தவர்களான குயிலன், தனுபன் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர். (ச- 25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மணிவிழாவும் மலர் வெளியீடும்!

யாழ்.ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலய ஓய்வுநிலை அதிபரும், சைவப் புலவருமான செ.பரமேஸ்வரனின் மணிவிழாவும் மலர் வெளியீட்டு நிகழ்வும் யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மைய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றன. நிகழ்வில் மணி விழாச் சிறப்பு மலர் வெளியிடப்பட்டது. விசேட நிகழ்வுகளாக "அறுபது என்பது வாலிபமா? வயோதிபமா?" எனும் தலைப்பில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசனை நடுவராகக் கொண்ட பட்டிமன்றமும், கேதீஸ்வரன் வேலதீபன் மற்றும் குழுவினரின் வயலின் இசை அரங்கு நிகழ்வும் நடைபெற்றன. (ச-22,66)



# சங்குக் கூட்டணியினர் மன்னாரில் பதவியேற்பு

மன்னார், ஜூன் 6

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பில் மன்னார் மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வு, தமிழீழ விடுதலை இயக்கம் ரெலோக் கட்சியின் மன்னார் மாவட்டத் தலைமை அலுவலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் எஸ்.ஆர். குமரேஸ்,புளொட் அமைப்பின் மாவட்ட இணைப்பாளர் ஜேம்ஸ்,தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மாவட்ட அமைப்பாளர் ஜோன்சன்,சுயேச்சைக் குழுவின் தலைவர் ஜி.எம்.சீலன் ஆகியோர் கலந்துகொண்டதோடு, அவர்கள் முன்னிலையில் உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம் செய்தனர். (ச- 25, 56)



# வலய மட்ட கரம் போட்டி சண்டிலிப்பாய் இந்து சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூன் 6

20 வயது ஆண்களுக்கான வலயமட்ட கரம் போட்டியில், சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி வெற்றிபெற்று கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது. சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியை எதிர்த்துப் போராடி மூன்றுக்கு இரண்டு எனும் செட் கணக்கில் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி சம்பியனானது. (ச-25, 63)

இந்தியத் துணைத்தூதரகம் மற்றும் யாழ்ப்பாணம் மாநகரசபையின் ஏற்பாட்டில் பழைய பூங்கா வளாகத்தில் கடந்த திங்கட்கிழமை மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டன. இந்தியத் துணைத்தூதுவர் எஸ்.சாய் முரளி மற்றும் மாநகர ஆணையாளர் ச.கிருஷ்ணேந்திரன் ஆகியோரால் மரக்கன்றுகள் நாட்டப்பட்டன. அத்துடன்பழைய பூங்கா வீதியும் துப்பரவுசெய்யப்பட்டது. (ச-25,9)



# கடல்சார் களப் பயிற்சிக்கற்கை சான்றிதழ் வழங்கும் நிகழ்வு



கொழும்பு, ஜூன் 6

ஐக்கிய நாடுகள் சபையின் போதைப்பொருள் மற்றும் குற்றம் தொடர்பான அலுவலகத்தால் திருகோணமலை சிறப்புக் கப்பல் படைத் தலைமையகம் மற்றும் சோபர் தீவில் நடத்தப்பட்ட படகுகளில் நுழைதல், சோதனை செய்தல் மற்றும் கைப்பற்றுதல் முறைகள் தொடர்புடைய பிராந்திய பயிற்சிப் பாடநெறி மற்றும் கடல்சார் கள விழிப்புணர்வுப் பயிற்சிப் பாடநெறி வெற்றிகரமாக நிறைவடைந்தன. இதற்கான சான்றிதழ் வழங்கும் விழா கடந்த வெள்ளிக்கிழமை, சிறப்புக் கப்பற் படைப்பிரிவின் கட்டளை அதிகாரியின் தலைமையில் நடைபெற்றது. (ச-33-125)



தென்மராட்சிப் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான குடும்ப வலுவூட்டல் வேலைத்திட்டத்தின் குடும்ப உள வலுப்படுத்தல் தொடர்பான பயிற்சிச் செயலமர்வு பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. செயலமர்வில் வளவாளர்களாக யாழ். மாவட்டச்செயலக உளவளத் துணைப் பிரிவு உத்தியோகத்தர்களான என்.உதயகுமார் க.தர்மசேகரம் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-25,9)



பருத்தித்துறை தும்பளை தம்புருவளை சித்திவிநாயகர் கோவில் வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (ச-25,9)



# கழிவு முகாமைத்துவம் விழிப்புணர்வு நிகழ்வு

சுற்றுச்சூழல் வாரத்தை முன்னிட்டு வேலணைப் பிரதேச செயலகத்தினரால் கழிவு முகாமைத்துவம் மற்றும் சூழல் பாதுகாப்புத் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. வளவாளராகப் பிரதேச செயலக உற்பத்தித்திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் யு.ஜெமோனா, சுற்றுச்சூழல் அபிவிருத்தி உத்தியோகத்தர் கு.தினேஸ், கௌரி ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-25,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 17 . 03 . 1958



மறைவு 07 . 05 . 2025

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து கடந்த
07-05-2025 புதன்கிழமை இறைபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

### அமரர் இராசேந்திரம் குசலகுமாரி


அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று முன்தினம் 04.06.2025 புதன்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (06.06.2025) வெள்ளிக் கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறுகின்றது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின் றோம்.

அளவெட்டி கிழக்கு,
அலுக்கை, அளவெட்டி.

குடும்பத்தினர்

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 13 . 03 . 1948



மறைவு 19 . 05 . 2024

### அமரர் ஞானம் நாகமணி

திதி: வைகாசி மாத வளர்பிறை ஏகாதசி

அனலில் நிதம் வாடி
அழகாய் எமை வளர்த்தவரே...
அரை நொடியில் உயிர் துறந்து
அநாதை ஆக்கி போனீரே...
அனுதினமும் நாம் கலங்கி
அல்லல் பட்டு தவிக்கின்றோம்...
அறுதியானது ஆண்டொன்று
அகலாது உங்கள் நினைவு...
எம்மை விட்டு என்றென்றும் எங்கள் அப்பாவே...!!!!

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.


## மணிவிழா

யாழ்., ஜுன் 6

கைதடி பிரதேச மக்களின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் அ.லோகநாதனின் மணிவிழா நாளை சனிக்கிழமை கைதடி மேற்கு இணுங்கித் தோட்ட அன்னை இரத்தின மணிமண்டபத்தில் காலை 9மணிக்கு இடம்பெறவுள்ளது. ஓய்வுநிலை அதிபர் சி.பவளகுமாரன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

(41-159)

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### சண்முகம் இராஜேஸ்வரன்

வையகத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு
வழிகாட்டிய என் அருமை தந்தையே
என்றும் உங்களின் நீங்காத
நினைவுகளுடன் உங்கள்
ஆத்மா சாந்தியடைய இறைவனை
பிரார்த்திக்கின்றேன்.

தோற்றம் 19.07.1955

மறைவு 06.06.2015

மகன், மருமகள் மற்றும்
குடும்பத்தினர்

(CS/58473 J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவை-நலன்-பாராட்டு
(மணிவிழா வாழ்த்து)




யா/ கைதடி கலைவாணி வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றி 05.06.2025 இல் அரச சேவையைப் பூர்த்தி செய்து 06.06.2025 இல் மணிவிழாக் காணும்

**திருமதி.ரதிவதனி அஜித்குமார்**
(BED, SLTS - I)


**சேவை விபரம்**

16.03.1990 - 02.03.1997 வரை - கிளி/மத்திய கல்லூரி
03.03.1997 - 04.06.2002 வரை - கிளி/வன்னேரிக் குளம் மகா வித்தியாலயம்
05.06.2002 - 22.10.2009 வரை - கிளி/புனித திரேசா பெண்கள் பாடசாலை
23.10.2009 - 04.03.2018 வரை - மட்/புளியடிமுனை அ.த.க பாடசாலை
05.03.2018 - 05.06.2018 வரை - யா/கைதடி கலைவாணி வித்தியாலயம்

எண்ணிலா மாணவரை இப்புவியில் கற்பித்து
இனிதுயர வைத்திட்ட இனியவரே
கண்ணெனக் கருதிய கலைவாணி சமூகத்தார்
கரம் கூப்பி வாழ்த்துகின்றோம் வழியவே

யா/ கைதடி கலைவாணி வித்தியாலயம்
கைதடி.
06.06.2025.


வாழ்த்துவோர்
பாடசாலைச்சமூகத்தினர்.


யாழ். மாவட்டச் செயலகத்துக்கு அருகாமையில் உள்ள கால்வாய்கள் நேற்றுப்புதன்கிழமை சுத்தம் செய்யப்பட்டன. மாவட்ட பதில் செயலர் ம. பிரதீபனின் வேண்டுகோளுக்கு இணங்க வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஊழியர்களால் இந்த சுத்தப்படுத்தல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. (ச-25,27)


யா/நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது கல்லூரியின் பிரதி அதிபர்
**திரு க.சிவகுமாரன்**
அவர்கள் கடந்த 28-05-2025
அன்று புத்தூர் மெ.மி.த.க பாடசாலை
அதிபராக பதவியுயர்வு
பெற்றுச் சென்றுள்ளார்
இவரது சிறந்த பணிக்காக
நன்றிகளை தெரிவிப்பதோடு
மேன்மேலும் பதவியுயர்வுகள்
பெறவேண்டும் என வாழ்த்துகிறோம்
**கல்லூரிச் சமூகத்தினர்**


# தந்தை செல்வா காட்டிய கூட்டணியில் இணையுங்கள்

## ஆனந்தசங்கரி வேண்டுகோள்

கொழும்பு, ஜுன் 6

இலங்கை தமிழரசுக் கட்சியினர் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணைந்து வெற்றிகரமாக செயற்பட ஒத்துழைப்பதே தந்தை செல்வாக்கு நீங்கள் செய்யக்கூடிய மரியாதையாகும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார். யாழ் . ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உங்களது பதவிகளுக்காக தமிழ் மக்களை ஏமாற்றாதீர்கள். தந்தை செல்வா, ஜி.ஜி.பொன்னம்பலம், தொண்டமான் உள்ளிட்டவர்கள் உருவாக்கிய தமிழர் விடுதலைக் கூட்டணி இன்றும் இருக்கிறது. தந்தை செல்வா காட்டிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் வழியில் அனைவரும் ஒன்றுசேர்ந்து வரவேண்டும். நான் அரசியலில் இருந்து ஒதுங்கத் தயார். (ச-4120)




கருகம்பனை - அந்திரானை
## கவுணாவத்தை நரசிங்க வைரவர் ஆலயம்
வருடாந்த மரபுவழி வேள்விப்பொங்கல் - 2025

விளக்கு வைப்பு 06.06.2025 வெள்ளிக்கிழமை (இன்று)

**வேள்விப்பொங்கல்**
**14.06.2025 சனிக்கிழமை**

எட்டாம்மடை 20.06.2025 வெள்ளிக்கிழமை

குறிப்பு - வேள்விப் பொங்கல் தினத்தன்று வழமை போன்று கிடாய்கள், சேவல்கள் காணிக்கையாக்கப்பட்டு நேர்த்திகள் நிறைவேற்றப்படும் என்பதுடன் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாகவே வேள்வி பொங்கல் இடம்பெறவுள்ளது.

தர்மகர்த்தா - சி. புவனேஸ்வரா (076 404 3803)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேலைவாய்ப்பு**

யாழ் நகரில் அமைந்துள்ள சமுத்திரா ரேடரஸ் (Hard ware ) நிறுவனத்திற்கான வேலை வாய்ப்பு. (ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.) யாழ் நகரை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புக்கு :-
076 151 7481, 077 494 9683

**நாகபூஷணி திருமண சேவை**
**இடமாற்றம்**

359/6, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் (துர்க்கா மணிமண்டபத்துக்கு அண்மையில்)

மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தரப்பட்டு, துரிதமாகத் திருமணம் நிறைவேற்றி வைக்கப்படும்.

(CS/3325) (C) D*


**077 138 7596 , 071 999 9306**

**பெண் பராமரிப்பாளர் தேவை**

ஊரிக்காடு வல்வெட்டித்துறையில் இயங்கி வருகின்ற வல்வை முதியோர் இல்லத்திற்கு பெண் பராமரிப்பாளர் தேவை. உணவு, தங்குமிட வசதி இலவசம். தகுந்த சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

நிர்வாகி
077 810 6857, 075 974 2495, 021 226 5551

(CS/58478) J-1



## சுற்றுச்சூழல் வாரத்தில் சிரமதான நடவடிக்கை

தேசிய சுற்றுச்சூழல் வாரத்தை முன்னிட்டு வேலணைப் பிரதேசசபையின் பிரதேசத்தில் ஆளுகைக்குட்பட்ட ஊர்காவற்றுறைக்கான பிரதான வீதியின் கரையோரப்பகுதி நேற்று முன்தினம் புதன்கிழமை சிரமதானம்மூலம் துப்பரவு செய்யப்பட்டது. வேலணைப் பிரதேச சபையின் ஏற்பாட்டில் வேலணைப் பிதேசச பையின் செயலாளர், உத்தியோகத்தர்கள், மற்றும் பிரதேச மக்களின் பங்களிப்புடன் குறித்த சிரமதானப் பணி முன்னெடுக்கப் பட்டது. இதன்போது பிளாஸ்ரிக் பொருள்கள், குப்பைகள் குறித்த பகுதியிலிருந்து அகற்றப் பட்டன. (ச-41-27)


## சிற்பியாறு அந்தோனியார் ஆலய வருடாந்தத் திருவிழா

மன்னார், ஜூன் 6

மன்னார் சிற்பியாறு பாம்பு வழிகாட்டி அந்தோனியார் ஆலய வருடாந்தத் திரு விழா கடந்த செவ்வாய்க்கிழமை சிறப் பாக நடைபெற்றது.

பக்தர்கள் தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றும் முகமாக உண வுப்பொருள்களைத் தானம் செய்தும், தமது வேண்டுதல்கள் எழுதிய கடதாசி களையும், பிள்ளைப்பேறு வேண்டித் தொட்டில்களையும் மரங்களில் கட்டி யும் வழிபாட்டில் ஈடுபட்டனர். (ச-25, 27)

**கண்ணீர் அஞ்சலி**



சச்சிதானந்தக் குருக்கள் பிரபாகரன்



பிரபாகரன் அக்ஷை

யாழ் பல்கலைக்கழக நடனத்துறை முதுநிலை விரிவுரையாளரும் மேளான் தலைவருமாகிய கலாநிதி (திருமதி) சீதாலஷ்மி பிரபாகரன் அவர்களது அன்புக்கணவர் ச. பிரபாகரன், பாசமிகு புதல்வன் பி. அக்ஷை ஆகியோரின் மறைவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவர்கள் இருவரினதும் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர்,
விரிவுரையாளரகள், போதனாசிரியர்கள்,
கல்வி சாரா ஊழியர்கள்,
மாணவர்கள்,
நடனத்துறை யாழ் பல்கலைக்கழகம்.





யாழ். மாவட்டச் செயலகத்தில் வரவில் சிறந்த உத்தியோகத்தர்கள் மற்றும் வரவை ஒழுங்காகக் கடைப்பிடிக்கும் கிளைகளுக்கான பாராட்டுச் சான்றிழ்கள் நேற்று வியாழக்கிழமை வழங்கிவைக்கப்பட்டன. (ச-25, 9)



ஊரெழு கணேச வித்தியாசாலையில் உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு நேற்று வியாழக்கிழமை மரக்கன்றுகள் நடுகைசெய்யப்பட்டன. (ச-25)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சட்டவரைவு...

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் சபாநாயகர் தலைமையில் கூடியது. இதன்போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கத்தால் குறித்த சட்டவரைவு சபையில் நேற்று முன்வைக்கப்பட்டது.

1988ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க மாகாணசபைத் தேர்தல்கள் சட்டத்தைத் திருத்துவதற்கு ஏதுவான அந்தச் சட்டமூலத்தை முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நிசாம் காரியப்பர் வழிமொழிந்தார். மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்குத் தடையாக உள்ள காரணங்களை நீக்கி, தேர்தலை நடத்துவதற்கு வழிவகுக்கும் வகையிலேயே குறித்த தனிநபர் சட்டவரைவு அமைந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. (அ-ம-44-26)

## ஆயிரக்கணக்கில்...

எதிர்வரும் 10ஆம் திகதி பௌர்ணமி தினத்தன்று திஸ்ஸ விகாரையில் வழிபாடுகள் இடம்பெறவுள்ளன. அந்த வழிபாடுகளுக்காகவே, ஆயிரக்கணக்கான சிங்கள மக்களைக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வட்ஸ்அப் மற்றும் பேஸ்புக் தளங்கள் மூலம் தகவல்களை வழங்கி ஆட்களைத் திரட்டும் பணியில் சில சிங்கள கடும்போக்குச் செயற்பாட்டாளர்கள் ஈடுபட்டுள்ளனர் என்றும் தெரியவருகின்றது.

திஸ்ஸ விகாரைக் காணிகள் தொடர்பான போலியான தகவல்களை வழங்கியே இந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கையில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரையை அகற்றக்கோரியும், விகாரை அமைந்துள்ள காணி மற்றும் அதனைச் சூழவுள்ள காணிகளைக் காணி உரிமையாளர்களிடம் மீளவும் வழங்குமாறு வலியுறுத்தியும் ஒவ்வொரு பொசன் தினத்தன்றும் தமிழர்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## தமிழரசு...

வுள்ளது என்று வெளிவரும் தகவலில் எவ்வித உண்மையும் இல்லை என்று தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண மாநகரசபை உறுப்பினர் சு.கபிலன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சில உள்ளூராட்சிச்சபைகளில் தமிழரசுக் கட்சி ஆட்சியமைக்கத் தேசிய மக்கள் சக்தி ஆதரவு வழங்கவுள்ளது என சமூக வலைத்தளங்களில் தகவல்கள் வெளியாகி வருகின்றன. இது தொடர்பில் ஊடகங்கள் வினவியபோதே, அவை போலியான தகவல் என சு. கபிலன் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேர்தல் காலத்திலும் தேசிய மக்கள் சக்திக்கு எதிராக மக்கள் மத்தியில் வதந்திகளைப் பரப்பியவர்கள், தேர்தலுக்குப் பின்னரான காலத்திலும் மக்கள் மத்தியில் வதந்திகளைப் பரப்பி வருகிறார்கள்.

எமது மக்களை வதந்திகள் மூலமாக வழிநடத்தி நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றிபெற்றதாகக் கருதும் எந்தவொரு சுயநல அரசியல் கட்சிகளுடனும் கூட்டுச் சேரவோ இணைந்து பயணிக்கவோ தேசிய மக்கள் சக்தியினராகிய நாம் முன்வரப்போவதில்லை என்பதை எமது மக்களுக்குப் பொறுப்புடன் அறியத்தருகின்றோம்.

எமது மக்கள் வழங்கியுள்ள ஆணையின் பிரகாரம் எமக்கு வாக்களித்த மக்கள் வாக்களிக்காத மக்கள் என்ற பேதமின்றி ஒவ்வொருவரும் சமூகம் சார்ந்தும், பிராந்தியம் சார்ந்தும் உயர்வு பெற வலுவான எதிரணியாக செயற்படுவோம் - என்றார். (அ-ம-26)

## சித்துப்பாத்தி...

காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பம் தொடர்பான கட்டளை இன்று வழங்கப்படவுள்ளது.

சித்துப்பாத்தி மயானத்தில் அகழ்வு நடைபெறும் குற்றப் பிரதேசத்தை மனிதப் புதைகுழியாக பிரகடனப்படுத்துமாறுகோரி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் காணாமலாக்கப்பட்ட உறவுகளைத் தேடும் குடும்பங்களின்சார்பில்விண்ணப்பமொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த விடயம் தொடர்பில் சட்ட மருத்துவ அதிகாரியின் அபிப்பிராயத்தையும், யாழ்ப்பாணப் பொலிஸாரின் நடவடிக்கை தொடர்பிலும் அறிக்கையைத் தருமாறு யாழ்ப்பாண நீதவான் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா ஏற்கனவே கோரியிருந்த நிலையில், இந்த மனுமீதான கட்டளையே இன்று வழங்கப்படவுள்ளது. (அ-ம-26)

## புலிகளிடமிருந்து (பிமல்)...

பயன்படுத்தப்படும் - இவ்வாறு சபை முதல்வரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றிய செல்வம் எம்.பி., 'மக்களின் நகைகளை மக்களிடமே ஒப்படைக்க வேண்டும்' என்று கோரியிருந்தார். இந்த விடயம் தொடர்பில் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் பிமல் ரத்நாயக்க மேலும் கூறியதாவது:-

ஜனாதிபதியின் ஆலோசனைக்கமையவே இராணுவத்தின் வசமிருந்த தங்கம், பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவை சரியாக மதிப்பிடப்படவேண்டும். இரசாயன பகுப்பாய்வுக்கு உட்படுத்தவேண்டும். அந்த அறிக்கை கிடைக்கப்பெற்ற பின்னர், மக்களுக்கு அவற்றை பெற்றுக் கொடுக்கும்நடவடிக்கை ஆரம்பமாகும். அத்தாட்சிப் பத்திரம் இல்லாத சில நகைகள் மிஞ்சும் என எதிர்பார்க்கின்றோம். அவை வடக்கு அபிவிருத்தி நிதியமொன்று உருவாக்கப்பட்டு அதில் வைப்பிலிடப்படும். அந்த நிதியத்துக்கு அரசாங்கமும்நிதிவழங்கும். புலம்பெயர் மக்களும் பங்களிப்பு வழங்கலாம். அந்த நிதியம் ஊடாக வடக்கு கட்டியெழுப்பப்படும் - என்றார். (அ-ம-44)

## வீட்டுக்கு...

உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைப்பதற்காக, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைமை அலுவலகத்துக்குச் சென்று (சிறீதர் தியேட்டர்) அந்தக் கட்சியின் செயலாளர் நாயகமான டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவரான சீ.வீ.கே. சிவஞானம்.

தமிழ்த் தேசியப் பேரவையும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியும் இணைந்து உள்ளூராட்சித் தேர்தலில் ஆட்சியமைப்பது தொடர்பில் கொள்கை ரீதியிலான உடன்பாடுகளை எட்டியுள்ள நிலையிலேயே, தமிழரசுக் கட்சியின் தலைவர் ஈ.பி.டி.பி.யைச் சந்தித்துக் கலந்துரையாடல் நடத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்ததாவது:-

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உத்தியோகபூர்வ கோரிக்கை கட்சி மட்டத்தில் மக்கள் நலன்சார்ந்து பரிசீலிக்கப்படும். விரிவான பரிசீலனைகளைத் தொடர்ந்து முடிவுகள் அறிவிக்கப் படும் - என்றார். (அ-ம-26-125-27-20)

## புலிகளிடமிருந்து (செல்வம்)...

தமிழீழ விடுதலைப்புலிகளின் வைப்பகத்தில் இருந்து மீட்கப்பட்ட மக்களின் நகைகள் அரச உடமையாக்கப்படக்கூடாது. அந்த நகைகள் மக்களுக்கே உரிய வகையில் வழங்கப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வலியுறுத்தியுள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

புலிகளின் வைப்பகத்தில் இருந்து மீட்கப்பட்ட தங்கம், பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் இந்தச் செயலை பாராட்டுகின்றேன். இது மக்களின் நகைகளாகும். மக்களிடம் அதற்குரிய அத்தாட்சியும் உள்ளது. எனவே, மக்களின் தங்கம் அவர்களிடமே ஒப்படைக்கவேண்டும். அது பொதுவுடமையாக்கப்படக் கூடாது.

அத்தாட்சிப் பத்திரத்தை முன்வைக்க முடியாதவர்கள் அடையாளங்களைக் கூறினால், அதனை சாதகமாகப் பரிசீலிக்கும் ஏற்பாடும் இருந்தால் நல்லது. வடக்கு அபிவிருத்திக்கு அதை பயன்படுத்தும் யோசனையும் நல்லதுதான். ஆனால் இயலுமானவரை மக்களிடம் வழங்குவதே பொருத்தமாக அமையும் - என்றார். (அ-ம-44)

## செம்மணிப்...

17ஆக உயர்ந்துள்ளது. கடந்த இரண்டு நாள்களாக மனிதப் புதைகுழியில் இருந்து ஆண், பெண் சிதிலங்கள் ஒன்றுடன் ஒன்று மிகவும் நெருக்கமாக இணைந்த நிலையில் மீட்கப்பட்டுவருகின்றன. அவற்றின் நடுவில் சிறுவர்களுடையவை என்று கருதப்படக்கூடிய சிறிய சிதிலங்களும் காணப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

துறைசார் நிபுணரும் பேராசிரியருமான சோமதேவாவின் தலைமையில் அகழ்வுப் பணிகள் இன்னும் தொடரவுள்ளன. நீதவான் ஆ.ஆனந்தராஜா அகழ்வுப் பணிகளைக் கண்காணித்துவருகின்றார். காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணி நிறஞ்சன், சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன் தலைமையிலான குழுவினர் ஆகியோரும் அகழ்வுப் பணிகளின்போது முன்னிலையாகிவருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## அகழ்வு...

பின்பற்றியும் மேற்கொள்ளப்பட வேண்டுமென வலியுறுத்தி நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டமொன்று இடம்பெற்றுள்ளது.

செம்மணி நுழைவாயிலுக்கு அருகில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்ததாவது:-

போரின் பின்னர் வடக்கு - கிழக்கில் பல இடங்களில் பல்வேறு புதைகுழிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. ஆனால், இன்றுவரை எந்த விடயத்திலும் நீதி நிலைநாட்டப்படவில்லை. கால இழுத்தடிப்புகளே மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. அரியாலை செம்மணி சித்துப்பாத்தியில் தற்போது அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் புதைகுழியும் பெரும் அச்சத்தைத் தரும் வகையில் அமைந்திருக்கின்றது. எனவே, இந்தப் புதைகுழி அகழ்வில் சர்வதேசம் தலையிட வேண்டும் - என்றனர்.

இந்தப் போராட்டத்தில் வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சங்கத்தின் பிரதிநிதிகள், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய நான்கு மாவட்டங்களையும் சேர்ந்த காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (அ-ம-66-26-125-27)

## செம்மணியின்...

கொல்லப்பட்டுப் புதைக்கப்பட்டுள்ளனர். கிரிசாந்தி குமாரசுவாமியின் கொலை தொடர்பாக நீதிமன்றங்களில் இடம்பெற்ற வழக்குகளிலும், காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக ஆணைக்குழுக்களுக்கு அளிக்கப்பட்ட சாட்சியங்களிலும் இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே, செம்மணி சித்துப்பாத்தி இந்துமயானத்தில் தற்போது மேற்கொள்ளப்படும் அகழ்வு நடவடிக்கை ஒரு தனிப்பட்ட சம்பவமாக அல்லாமல் பெருமளவிலான அட்டூழியங்கள் இடம்பெற்ற தரவுகளை வெளிக்கொண்டுவரும் முக்கியமான வழியாகக் காணப்படவேண்டும். செம்மணியின் பல்வேறு பகுதிகளில் இவ்வாறு வெவ்வேறு மனிதப் புதைகுழிகள் இருக்கலாமென நாம் நம்புகின்றோம் - என்றனர். (அ-ம-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டுவாகல் பாலம் சீரமைப்பு ஓகஸ்ட் மாதம் ஆரம்பமாகும்!

## பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு



**கொழும்பு, ஜூன் 6**

**முல்லைத்தீவு, வட்டுவாகல் பாலத்துக்குரிய நிர்மாணப் பணிகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் ஆரம்பமாகும் என்று சபை முதல்வரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நந்திக்கடல், வட்டுவாகல் பாலத்தின் மாதிரித்திட்டம் இறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் ஓகஸ்ட் மாதம்நிர்மாணப்பணிகளை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கின்றோம் என்றசுபச்செய்தியைவெளியிடுகின்றேன். மத்திய அதிவேக நெடுஞ்சாலைநிர்மாணப்பணிகளும் உரிய வகையில் ஆரம்பமாகவுள்ளது - என்றார். முல்லைத்தீவு, வட்டுவாகல் பாலம் நிர்மாணிப்பதற்கு 2025 பாதீட்டில் ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (எ-44)





பல கோரிக்கைகளை முன்வைத்து நிறைவுகாண் மருத்துவத் தொழில் வல்லுநர்களால் ஆரம்பிக்கப்பட்ட வேலைநிறுத்தப் போராட்டத்தால் நேற்று மாதாந்த சிகிச்சைக்கு வந்த நோயாளர்கள் சிகிச்சைபெற்று மருந்து பெற்றுக்கொள்ளமுடியாதநிலையில் அசௌகரியங்களை எதிர்நோக்கினர். (ச-113)

# எச்சரிக்கைக் குறிப்பின்றி சிகரெட்கள் விற்பனை!

## தெல்லிப்பழையில் ஒருவருக்குத் தண்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 6

சுகாதார எச்சரிகைக் குறிப்புகள் மற்றும் உரிய காட்சிப்படுத்தல்கள் இல்லாமல், சிகரெட் உள்ளிட்ட புகையிலைசார் பொருள்களை விற்பனை செய்தவருக்கு மல்லாகம் நீதிமன்றத்தால் பெருந்தொகை தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பளை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் கடம்பரூபன் நேற்றுத் தாக்கல் செய்த வழக்கிலேயே, குறித்த வர்த்தக நிலையத்தின் உரிமையாளருக்கு இவ்வாறு தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன், அவருக்கு நீதிமன்றம் கடும் எச்சரிக்கையும் விடுத்துள்ளது.

தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பரா.நந்தகுமார் தலைமையில் புகையிலைசார் பொருள்கள் தொடர்பான சோதனைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-125)




# விளையாட்டுச் சீருடை வழங்கிவைப்பு

மன்னார், ஜூன் 6

மன்னார் மாவட்டம் மடுக் கல்வி வலயத்துக்குட்பட்ட சின்னவலயன்கட்டு அ.த.க. பாடசாலையில் முதன்முறையாக மாணவர்களுக்கான விளையாட்டுச் சீருடை அறிமுகம் செய்துவைக்கப்பட்டது. இந்த நிகழ்வு அதிபர் தலைமையில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது. புலம்பெயர் தேசத்தில் வசிக்கும் சாவகச்சேரியைச் சேர்ந்த நலன்விரும்பியின் நிதிப்பங்களிப்பில் இந்தச் சீருடை கையளிக்கப்பட்டது. (ச- 25,28)

# மருத்துவமுகாம்

யாழ்ப்பாணம், ஜூன் 6

வட்டுக்கோட்டை மருத்துவர்கள் ஒன்றிணைந்து நடத்தும் இலவச மருத்துவ முகாம், காந்திஜி சனசமூக நிலைய மண்டபத்தில் நாளை காலை 9 மணிதொடக்கம் பிற்பகல் 1 மணிவரை இடம்பெறவுள்ளது. இந்த மருத்துவ முகாமில் அனைத் நோய்களுக்குமான இலவச மருத்துவப் பரிசோதனைகளும் அவற்றுக்கான ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளன. அத்துடன், பெண்களுக்கான இலவச அல்ட்ரா சவுண்ட் ஸ்கானிங் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன. (ம-இ)

# வேளாங்கண்ணி அன்னை ஆலய நற்கருணைப் பெருவிழா திருப்பலி

யாழ்ப்பாணம், ஜூன் 6

குருநகர் புனித வேளாங்கண்ணி அன்னை ஆலய வருடாந்த நற்கருணைப் பெருவிழாத் திருப்பலி இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகவுள்ளது. திருவிழாத் திருப்பலி நாளை சனிக்கிழமை காலை 6 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகி நடைபெறும். (ச-25)

# மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 6

வல்வெட்டித்துறை வேர்வில் அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விக்னேஸ்வர சுவாமி தேவஸ்தான விசுவாவசு வருட மஹோற்சவம் கடந்த 2ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இடம்பெற்றுவருகின்றது.

எதிர்வரும் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை 6மணிக்கு அபிஷேகம் இடம்பெற்று 8மணிக்கு வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து காலை 9.30 மணிக்கு சுவாமி சித்திரத்தேரில் ஆரோகணம் செய்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கவுள்ளார்.

மறுநாள் 11ஆம் திகதி புதன்கிழமை சமுத்திர தீர்த்தம் இடம்பெறவுள்ளது. அதிகாலை 3மணிக்கு அபிஷேகம் இடம்பெற்று காலை 6.30மணிக்கு வல்வை ஊறணி சமுத்திரத்தில் தீர்த்தோற்சவம் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 12ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5மணிக்கு அரசடி விநாயகருக்குப் பொங்கல் இடம்பெற்று மறுநாள் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு பூங்காவான உற்சவம் இடம்பெறவுள்ளது. (ச-41-100)

**வேலையாட்கள் தேவை**

யாழ் நகரில் அமைந்துள்ள கட்டட நிர்மாண பகுதிக்கு களஞ்சிய காப்பாளர், மேற்பார்வையாளர் தேவை.

தொடர்புகளுக்கு: 077 959 2628

# முழுநேரக் கற்கைநெறிகள் விண்ணப்பங்கள் கோரல்

கிளிநொச்சி, ஜூன் 5

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் 2025 ஆம் ஆண்டு இரண்டாம் அரையாண்டுக்கான முழுநேரக் கற்கைநெறிகள் ஜூலை முதலாம் திகதி இத்தாவில் தொழில் பயிற்சி நிலையத்தில் ஆரம்பமாகவுள்ளன. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர், மின்னிணைப்பாளர் ஆகிய கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. கற்கவிரும்புவோர் பியில விரும்பும் கற்கை நெறி, முழுப்பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு தங்கள் பதிவுகளை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை பளை தொழிற்பயிற்சி நிலையம், கண்டி வீதி இத்தாவிலில் மேற்கொள்ள முடியும் எனப் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தினர் அறிவித்துள்ளனர். (ச-25, 9)

**காணி விற்பனைக்குண்டு**

நல்லூரில் 3 பரப்புக்காணி விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு: 077 723 8378

(C5 58478) E-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 மின்னஞ்சல்: news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org